# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

என்.ஜி.எம். கல்லூரி.
பொள்ளாச்சி

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை


நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.



பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : **செல்வி ம.காயத்ரி**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 96 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# திணைமரபு

**ம.காயத்ரி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

மனித இனத்தின் வளர்ச்சி என்பது அவன் சுற்றுப்புறச் சூழலோடு கொண்டுள்ள தொடர்பின் வெளிப்பாடாகும். இன்றைய சுற்றுச்சூழல் அறிவியலும் அத்தகைய கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

சங்கக் கவி மரபைத் தமிழ் மரபோடு அணுக வேண்டுமென்றால் திணை மரபே அதன் தொடக்கமாக இருக்கும். தொல்காப்பியம் திணை மரபு குறித்த பல தகவல்களை நமக்குத் தந்துள்ளது. உரையாசிரியர்கள் தமது காலத்தில் வழக்கத்தில் இருந்த கவிதைகளின் உதவியுடன் தொல்காப்பியத் திணை மரபை அணுகியுள்ளனர். தவிர்க்க இயலாமல் தொல்காப்பியத் திணை மரபை உரையாசிரியர்களின் துணையுடன் தான் புரிந்து கொள்ள வேண்டிய சூழலில் இருக்கிறோம்.

திணை மரபு என்பது தொல்காப்பியத்தின் இலக்கியப் பொருண்மைக் கருத்துருவாக்கக் கொள்கை ஆகும். 'திணை' என்ற சொல்லுக்கான பொருளைத் தொல்காப்பியர் வரையறுக்கவில்லை. தொல்காப்பியர் அது குறித்து எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தார் என்பதையும் கணிக்க இயலாது. திணை மரபு பற்றிப் பல ஆராய்ச்சிகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

சங்கக் கவிதைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் திணை உருவாக்க அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு, முதலில் திணை பற்றிய புரிதலும் அவசியம்.

திணை பற்றி முதன்முதலில் எழுதியவர் இளம்பூரணரே. ஆனால் திணை குறித்த பொருண்மை விளக்கத்தை அவர் தனது உரையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. பொருளதிகார முதல் நூற்பாவிற்கு எழுதிய உரையில் 'எழுதிணை' என்பதற்கு 'எழுபொருள்' என்று கூறியதை அடிப்படையாகக் கொண்டு இளம்பூரணர் 'திணை' என்ற சொல்லுக்குப் 'பொருள்' என்று குறித்ததாகக் கூறுகின்றார்.

**"நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே"**

**(தொல்.அகத்.2)**

என்னும் நூற்பாவிற்கு உரை விளக்கம் தரும் இளம்பூரணர், 'ஒழிய' என்னும் வினையெச்சம் எவ்வாறு முடிந்தது என்றால் 'பாத்திய' என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. அப்பெயரெச்சம் பண்பு என்னும் பெயர் கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றது கூறுகின்றார்.

திணை என்பது 'பண்பை' மையப்படுத்துகின்றது. திணைக்கான பொருளாகப் 'பண்பு' என்பதைக் கொண்டார் என்பதை 'மாயோன் மேய.."என்ற நூற்பாவில் 'இது நிறுத்தமுறையானே நிலத்தால் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்ற தொகை விளக்கம் உறுதிசெய்கின்றது. 'நிலத்தால் திணையாமாறு' என்னும் கூற்றை இங்குக் கவனிக்க வேண்டும். திணையை நிலம் என்று இளம்பூரணர் கருதியிருந்தால் இப்படி எழுதியிருக்க மாட்டார். நிலம் உள்ளதும் நிலம் இல்லாததுமான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழையும் பொதுவாகத் திணை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். திணை நிலத்தைக் குறித்திருந்தால் நிலம் வகுக்கப்பெறாத கைக்கிளை, பெருந்திணையையும் திணைக்கான வரையறைக்குள் தொல்காப்பியர் சேர்த்திருக்கமாட்டார். எனவே தொல்காப்பியரின் கொள்கைப்படி திணை என்பது நிலத்தைக் குறிக்கவில்லை. நிலத்தின் பண்பையே இங்கு அவர் குறிப்பிடுகின்றார். அதே நேரத்தில் நிலப் பண்போடு தொடர்புடைய தெய்வத்தையும் பண்பாகவே முடிவுசெய்கிறார்.

திணை என்ற தமிழ்ச்சொல்லிற்கு 'இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்' எனப் பல பொருள்களைத் தருகிறது (நா. கதிரவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.769) எனவே வாழிடம் எனும் பொருளைத் தரும் 'Ecology' என்ற ஆங்கிலச்சொல், மனிதவாழ்வின் பல நிலைகளையும் குறிக்கும் 'திணை' என்ற சொல்லே மிகவும் பொருட்செறிவுடன் அமைந்திருத்தலை அறியமுடிகின்றது.

அகத்திணையியலின் 21 ஆம் நூற்பா தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது.

**"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**
**அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்**
**வந்த நிலத்தின் பயத்த ஆகும்" (தொல்.அகத்.21)**

என்ற நூற்பாவில் திணை என்பது நிலமல்ல. நிலத்திலுள்ள பொருளை, அதன் பண்பை மையமாகக் கொண்டது என்பதை வலியுறுத்துகிறது.

இவ்வாறு வருவன திணை மயக்கம் அன்றென்றவாறு என்று வகுத்ததையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சங்கக் கவிதைகளின் அடிப்படை முதல், கரு, உரி என்ற மூன்றிலும் உள்ளது. இம்மூன்றையும் உட்கொண்டது. முதல் எனப்படுவது நிலமும் காலமும். அதன் பண்புகளாகக் கருவும் உரியும் உள்ளன. இதன் காரணமாகவே திணை என்ற அடிப்படைக் கோட்பாட்டிற்கு இந்த மூன்றையும் தொல்காப்பியர் வைத்துள்ளார்.

**"திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**
**நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப"**
**(தொல். அகத். 14)**

என்று திணை மயக்கம் பற்றித் தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார். திணை மயக்குறுதல் - அதாவது ஒரு நிலத்திற்குச் சொல்லப்பட்ட பண்பு மற்ற நிலத்திலும் வரலாம். ஆனால் நிலம் மட்டும் மாறாது என்பது இதன் கருத்து. இதன் பின்னணியில் காலமும் மாறும் என்பதையும் பெறமுடிகிறது. காலம் மாறாது என்று தொல்காப்பியர் குறிப்பிடவும் இல்லை. காலம் மாறினால் (மயங்கி மற்ற நிலத்திற்கு வந்தால்) உரிப்பொருளும் அனைத்து நிலத்திற்கும் மாறி வரும். ஏனென்றால் காலத்தையும் உரிப்பொருளையும் இணைத்தே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**"உரிப்பொருள் இல்லன மயங்கவும் பெறுமே"**
**(தொல். அகத். 15)**

என்று தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார். இதற்கு உரையியற்றிய இளம்பூரணர், உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும் முதற்பொருளும் மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும் என்றார். இதற்கு மாறாக நச்சினார்க்கினியரோ, "உரிப்பொருளென்று ஓதப்படும் ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும்" என்றார். நச்சினார்க்கினியர் "திணை மயக்குறுதலும்" என்ற நூற்பாவிற்கு எழுதிய விளக்க உரையில், "ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வருமென்பதும் நிலன் இரண்டு மயங்காதெனவும் காலம் இரண்டுந் தம்முள் மயங்கும் என்று கூறினார். ஓர் உரிப்பொருளோடு ஓர் உரிப்பொருள் மயங்குதலும் ஓர் உரிப்பொருள் நிற்றற்குரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும் பெறும்" என்று உரிப்பொருள் மயக்கத்தை விரிவாக விளக்கியுள்ளார். இளம்பூரணர், 'உரிப்பொருள் மயங்கி வராது' எனக் கூற நச்சினார்க்கினியர் 'உரிப்பொருள் மயங்கும்' என்றார்.

'உரிப்பொருளின்' தன்மையைப் புரிந்துகொண்டால், 'உரிப்பொருள் மயக்கம்' பற்றிய தெளிவை நம்மால் அறியமுடிகின்றன.

**உரிப்பொருளின் இலக்கணத்தைத் தொல்காப்பியத்தின்படி,**

| திணை | உரி | காலம் |
|---|---|---|
| குறிஞ்சி | புணர்தல் | கூதிர், யாமம் |
| பாலை | பிரிதல் | வேனில், நண்பகல் |
| முல்லை | இருத்தல் | கார், மாலை |
| நெய்தல் | இரங்கல் | எற்பாடு பொழுது |
| மருதம் | ஊடல் | வைகறை, விடியல் |

என்று வரிசைப்படுத்த வேண்டும். இங்கு உரிப்பொருள் நிலத்திற்கு உரியதாக இல்லாமல் காலத்தோடு தொடர்புபட்டுள்ளது. சான்றாகப் புணர்தல், குறிஞ்சி என்னும் நிலத்தை மையப்படுத்தாமல் கூதிர் காலத்தையும் யாமப் பொழுதையும் மையப்படுத்தி இருக்கின்றது. புணர்தலுக்கான சூழல் தனிமையும் இரவுப்பொழுதும் என்பதும் அதற்கு உகந்தது வேனில் காலமோ கார் காலமோ அல்ல கூதிர் காலமே என்பதும் இதன் பொருள். இருத்தல் என்னும் உரிப்பொருள் முல்லைக்கு உரியதாகச் சொல்லப்பட்டு இருந்தாலும் அது நிலத்தைக் குறிக்காமல் கார் காலத்தையும் மாலைப் பொழுதையுமே குறித்து உள்ளது. பொருளாதாரம், கல்வி, போர் முதலான காரணத்திற்காகப் பிரிந்து சென்ற காதலன் திரும்பி வரக் கால தாமதம் ஏற்படும் பொழுது ஏற்படுகின்ற வருத்தத்தை மாலை நேரமும் கார் காலமும் மிகுதிப்படுத்துவதால் இருத்தலுக்கு இக்காலப் பகுப்பை ஏற்படுத்தியுள்ளனர். இதைப் போலவே மற்ற உரிப்பொருள்களும் நிலத்தை மையப்படுத்தாமல் காலத்தை மையப்படுத்தியே செயல்படுகின்றன. இதன் காரணமாகவே தொல்காப்பியரும் 'நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப' என்றார். நிலம் மட்டுமே மயங்காமல் இருக்கும். காலமும் உரிப்பொருளும் கருப்பொருளும் மயங்கும். அதாவது மற்ற நிலத்திலும் வரும். 'திணை மயக்குறுதல் கடிநிலை இல' என்று கூறிய தொல்காப்பியர், நிலத்தை மட்டும் தனியே பிரித்து 'நிலனொருங்கு மயங்குதல் இல்லை' என்றார். இதன் பின்னணியில் பார்க்கும் போது திணை என்பது நிலம், காலம், பூ, பறவை, மரம், விலங்கு முதலானவை சேர்ந்த கரு மற்றும் உரி ஆகியவற்றை உள்ளடக்கிய பண்பு ஆகும்.

நச்சினார்க்கினியர், திணைக்கான வரையறையைச் செய்துள்ளார். 'திணையாவது ஒழுக்கம்' என்பது அவரது கருத்து. இங்கு ஒழுக்கம் என்பது எதைக் குறித்தது என்பதில் நாம்

கவனம்செலுத்த வேண்டும். ஒழுங்கு என்னும் வினையின் பெயர்ச் சொல்லாக வருவது ஒழுக்கம். ஒழுங்கு என்பது முறையாதலைக் குறிக்கின்றது. அதாவது வகுக்கப்பட்ட முறையிலிருந்து மாறாதது ஒழுங்கு. திணை என்று வகுக்கப்பட்ட முதல், கரு, உரி ஆகிய மூன்று பண்புகளும் தம் முறையிலிருந்து மாறாது செயல்படும் என்பதே அதன் பொருள். எனவே திணை என்பது 'பண்பை' மையப்படுத்திச் செயல்படுவதாகும். திணையில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்ட பெயரும் பண்பை அடிப்படையாகக் கொண்டது. மக்களுக்கான பெயரை இரண்டு அடிப்படைகளில் வழங்க வேண்டும் என்று தொல்காப்பியர் வரையறுக்கின்றார்.

**"பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய**
**திணை தொறும் மரீஇய திணைநிலைப் பெயரே"**
**(தொல்.அகத். நூ.22)**

பெயர் - வினை என்னும் இரண்டு பிரிவுகளில் மக்களுக்குப் பெயர்கள் வழங்கப்பட வேண்டும் என்று வரையறை செய்கின்றார். அடுத்த இரண்டு நூற்பாவில் அவர்களுக்கான பெயர்களையும் குறிப்பிடுகின்றார். (தொல்.அகத்.நூ.23,24). பெயர் - வினை ஆகிய இரண்டும் பண்பு என்னும் தன்மையை உடையவை. எனவே மக்களுக்கு வைக்கப்பெற்ற பெயர்கள் கருப்பொருளைப் பின்னணியாகக் கொண்டு இருப்பதால் பண்பையே மையமாகக் கொண்டது எனலாம்.

தமிழ்க் கவிதை மரபை ஓர்மை நோக்குக் கொள்கையில் அல்லாமல் பல்நோக்குத் தன்மையில் நாம் அணுக வேண்டும். தமிழ்க் கவிதைகளில் மொழி, சமூகம், பொருளாதாரம், வானவியல், இயற்கையோடு இயைந்த தன்மை, அறிவியல், சூழலியல் எனப் பல நிலைப்பட்ட தன்மைகள் மறைந்துள்ளன.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் ஐந்து நிலத்திற்கும் பொது. நிலம் எனப்பகுத்தவற்றுள் பாலைக்குத் தனியே நிலம் கிடையாது. எனவே நான்கு நிலங்களும் ஐந்து வகையான உணர்வுகளையும் உட்கொண்டிருக்கும். உணர்வுகளை வெளிப்படுத்தும் அல்லது மிகுதிப்படுத்தும் குறியீடுகளாகப் பூ, பறவை, மரம், விலங்கு முதலான இயற்கை உயிரினங்களும் பண், யாழ், தொழில் முதலான மனித உற்பத்திச் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

திணைக் கோட்பாடு தமிழர்களது இயற்கையோடு இயைந்த, இயற்கையைத் தன்வயப்படுத்திய வாழ்க்கை முறையைக் காட்டுகின்றது.

திணை அமைப்புமுறை பண்பை வெளிப்படுத்துவதால் சங்கப் பாடல்களைப் பண்பின் (திணையின்) அடிப்படையில் நாம் அணுக வேண்டும். சான்றாக, குறுந்தொகையில் குறிஞ்சித் திணைப் பாடலாகச்

சொல்லப்பட்டுள்ள "அமிழ்து பொதி" என்னும் பாடல் குறிப்பிடத்தக்கது. இப்பாடலைப் பாடியவர் தொல்கபிலர்,

**"அமிழ்து பொதி செந்நா வஞ்ச வந்த**
**வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்**
**பெறுகதிர் லம்ம யானே பெற்றாங்கு**
**அறிகதில் லம்ம இவ்வூரே மறுகில்**
**நல்லோள் கணவ னிவனெனப்**
**பல்லொர் கூற யாம் நாணுகஞ் சிறிதே" (குறுந்.14)**

என்ற பாடலின் மையக்கருத்து காதலியைத் திருமணம் செய்ய விரும்பும் காதலனின் வெளிப்பாடாக உள்ளது. இது 'புணர்ச்சி என்னும் உணர்வை, உரிப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. எனவே இது குறிஞ்சித் திணை எனப் பகுக்கப்பட்டதில் சிக்கல் எதுவும் இல்லை. ஆனால் இப்பாடல் குறிஞ்சி நிலத்தைப் பின்னணியாகக் கொண்டதல்ல. இப்பாடலின் நான்காம் அடி இப்பாடலுக்குப் பின்னணியாக உள்ள நிலத்தைக் காட்டுகின்றது.

**'அறிகதில் அம்ம இவ் ஊரே'**

என்ற பாடலடியில் வருகின்ற 'ஊர்' என்னும் நிலப்பெயர்ச்சொல் குறிஞ்சிக்கு உரியதல்ல. மருதத்திற்கு உரியது. மருதத்திற்கான இருப்பிடத்தை 'ஊர்' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதையும் வளமான இருப்பிடங்கள் ஊர் என்னும் பெயரைக் கொண்டுள்ளதையும் அறியமுடிகின்றது.

இந்தப் பாடலில் குறிஞ்சி என்பது நிலத்தைக் குறிக்காமல் உணர்வைக் (உரிப்பொருளை, பண்பை) குறித்து வந்துள்ளது. சங்கக் கவிதைகள் முழுவதுமே பண்பும் (உணர்வு முதலானவை) நிலமும் என இரண்டும் உட்படுத்திய பாடலாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட குறுந்தொகைப் பாடல்,

**'மருத நிலத்தில் புணர்தல் (குறிஞ்சி)'**

என்ற திணைக் கோட்பாட்டு முறையில் எழுதப்பெற்றுள்ளது.


பாலை தனக்கென்று நிலம் இல்லாதது. ஆனால் தனக்கென்று பண்பையும் அது சார் குறியீடுகளையும் கொண்டுள்ளது. பாலை துன்பத்துக்குரிய குறியீடாகவே தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளது.

புணர்தல் முதலான ஐந்து உரிப்பொருள்களும் (உணர்வுகளும்) தனித்தனியானவை அல்ல. இவை தமக்குள் ஓர் இணைவைக் கொண்டவை. புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய நான்கும் 'பிரிவு' என்னும் உணர்வை அடிப்படையாகக் கொண்டவை. பிரிவின் காரணமாகவே புணர்தல் சிறப்புப் பெறுகின்றது. பிரிதல் காரணமாக

இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய உணர்வுகள் ஏற்படுகின்றன. பிரிவு என்னும் துன்பமே மற்ற உணர்வுகளை இயக்குகின்றது. நிலம் இல்லாத பாலை (பிரிதல்) மற்ற உரிப்பொருள்களுக்கு அடித்தளமாக அமைகின்றது. இதன் காரணமாகவே சங்கத் தொகுப்பில் பாலைக் கவிதைகள் அதிகமாக இருக்கின்றன. இந்தப் பின்னணியில் பாலையும் மற்ற திணைகளைப் போல ஐந்தாகப் பிரிகின்றது. மற்ற திணைகள் நிலமும் பண்புமாக இணைய பாலை மட்டும் பண்புடன் நிலமும் அந்நிலத்தின் பண்பும் என்கிற கொள்கையைப் பெறுகின்றது.

பாலை பிரிவில் பாலை நிலமாக அல்லாமல் துன்பம் என்னும் உணர்வாக இருக்கும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் துன்பம் மிகுதியாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

சங்க கவிதைகளில் ‘பாலையில் பாலை’ என்னும் கொள்கையில் பாடல்கள் பல காணப்படுகின்றன. இப்பாடல்களில் எந்த நிலமும் குறிக்கப்பெற்று இருக்காது. (குறுந். 20, 43, 44, 56, 63, 135) துன்பக் காட்சியே பாடல் முழுவதும் பரந்து கிடக்கும். உரிப்பொருளில் பிரிதல் பொருளே (பாலை) மையப் புள்ளியாக உள்ளது. மற்ற நான்கு திணைகளும் பாலையோடு தொடர்பு கொண்டு உள்ளன. இதனைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.




சங்கக் கவிதைகளை இயக்குவது பாலை என்ற நிலமல்லாத திணை என்பது உறுதியாகின்றது. அகத்திணையை மட்டுமல்லாமல் புறத்திணையை இயக்குவதும் பாலையாக இருக்க முடியுமா? என்றும் நாம் ஆராய வேண்டும். தொல்காப்பியர் அகம் மற்றும் புறத்திணைகளை இணைவு உடையவையாக எழுதியுள்ளார். அகம் ஏழு திணை – புறம் ஏழு திணை என்று வகுத்ததும் இதை அடிப்படையாகக் கொண்டு தான்.

சங்கக் கவிதைகளைப் படைத்த கவிஞர்களே திணை வகுப்பில் ஈடுபட்டனர் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், பாடலைப் படைத்த கவிஞன் சமூகத்தின் செயல்பாட்டை இயற்கை அனுபவத்தைக் கவிதையில் வெளிப்படுத்த முனைவானே தவிர அதை விளக்குவதற்காக எத்தகைய முனைப்பையும் மேற்கொள்ள மாட்டான். அப்படிச் செய்வது அவனது வேலையும் அல்ல. எனவே, இன்று நமக்குக் கிடைக்கும் சங்கப் பிரதிகளில் குறிக்கப்பட்டுள்ள திணைகளையும்

அவற்றுக்கான துறைகளையும் நாம் நேரடியாக அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது.

**திணைக்கோட்பாடு**

- ஒவ்வொரு திணைக்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய இவை மூன்றும் சிறந்து அமையும்போது திணைக்கோட்பாடு உருவாகும்.
- அகத்திணை, புறத்திணைப் பாகுபாடு கொண்டது.
- ஒவ்வொரு அகத்திணைக்கும், புறத்திணைகள் உண்டு.
- உரிப்பொருள் அல்லன மயங்கும்.
- அகத்திணையில் சுட்டி ஒருவர் பெயர் கூறப்படாது.
- அகத்திணைக்கு அகப்புறமும், புறத்திணைக்கு புறப்புறமுமாகிய திணை துறைகள் உண்டு.
- அகத்திணை களவு, கற்பு என்ற கைக்கோள் கோட்பாட்டினைப் பெறும்.
- அகத்திணை, புறத்திணை உலகியல் வழக்கு, நாடக வழக்கு, புலனெறி வழக்கு போன்ற இலக்கிய நெறிகளைப் பெறும்.
- புறத்திணைகள் அகத்திணைகளுக்குரிய முதல், கருப்பொருட்களைப் பெறும்.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்